# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 17.10.2018 | | 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ம் தேதி புதன்கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம்நடைபெறும்.<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 17.10.2018 | 240 | **<u>பொருள் எண். 1</u>**<br><br>துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் கணினி வசூல் சேவை மையம், ஆதார் மையம், இ – சேவை மையம் ஆகியவற்றின் பாதுகாப்பு கருதியும் மேலும் பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சி அலுவலகத்தின் நுழைவு பகுதி, அலுவலக வளாகம் மற்றும் முதல் தளத்தில் எட்டு இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களுக்கு புதியதாக சேனல் மற்றும் கூடுதல் சேமிப்பு திறன் பொருத்தும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதற்கும் பட்டியல் தொகை ரூ. 26904/– வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.** 1551 /2018/இ1 | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 17.10.2018 | 241 | **<u>பொருள் எண். 2</u>**<br><br>துவாக்குடி நகராட்சியின் 2017–18 ம் நிதியாண்டின் தணிக்கை செய்வதற்கு புதிய கணக்கு தலைப்பின் கீழ் பொது நிதி கணக்கு மற்றும் குடிநீர் நிதி கணக்குகள் தயார் செய்து கொடுத்தமைக்கு TACT COMPUTER ACCOUNTING SOFTWARE CENTRE நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் தொகை ரூ. 30000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 870 / சி1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>17.10.2018</td>
<td>242</td>
<td>

**<u>பொருள் எண். 3</u>**

துவாக்குடி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் நகர்மன்ற தீர்மான எண். 213 நாள்.10.09.2018ல் அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.26.07.2018 –ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் துவாக்குடி நகராட்சிக்கு செலுத்தும் சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய உத்தேசிக்கபட்டு இவ்வறிவிக்கையினை தினத்தந்தி நாளிதழில் 13.09.2018 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் இது குறித்து ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் இவ்வறிவிப்பு வெளியிட்ட 30 தினங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ நகராட்சி ஆணையாளருக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்பட்டது. 30 நாட்கள் காலக்கெடு முடிவடைந்த நிலையில் ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, ஏற்கனவே உத்தேசித்த அடிப்படை மதிப்பினை நிர்ணயம் செய்யவும், கட்டிட பயன்பாடுவாரியாக நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மண்டல மதிப்பினை நீக்கி கீழ்க்கண்டவாறு சொத்துவரி மண்டல மதிப்பினை நிர்ணயம் செய்து 01.04.2018 முதல் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th rowspan="2">மண்டலம்</th><th colspan="2">சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்பு</th></tr>
<tr><th>தற்போதைய மதிப்பு</th><th>சீராய்வு செய்யப்பட்டுள்ள மதிப்பு</th></tr>
<tr><td>A</td><td>1.20 பைசா</td><td>1.80 பைசா</td></tr>
<tr><td>B</td><td>1.00 பைசா</td><td>1.50 பைசா</td></tr>
<tr><td>C</td><td>0.50 பைசா</td><td>0.75 பைசா</td></tr>
<tr><td>D</td><td>1.50 பைசா</td><td>A மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது</td></tr>
</table>

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்பினை குடியிருப்பு இனங்களுக்கு மட்டும் அட்டவணையின்படி தற்போதைய உயர்த்தப்பட்ட சொத்துவரிக்குரிய மண்டல அடிப்படை மதிப்பிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி மண்டல அடிப்படை மதிப்பு விவரங்களை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

</td>
<td>

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 17.10.2018 | 243 | **<u>பொருள் எண். 4</u>**<br><br>துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 09.10.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | துவாக்குடி நகராட்சி 5–வது வார்டு ராவுத்தாண்மேடு மடத்தான்குளம் கிழக்கு பகுதி (திருவள்ளுவர் நகர்) பகுதியில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் | 9.80 | ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம் | மதிப்பீட்டை விட 0.12 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.69 % அதிகம் |
| 2. | துவாக்குடி நகராட்சி 8–வது வார்டு வ.உ.சி நகர் சமுதாயக் கூடத்திற்கு சமயலறை கட்டுதல் | 9.50 | ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம் | மதிப்பீட்டை விட 0.14 % குறைவு<br>மதிப்பீட்டை விட 0.89 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

**ந.க.எண். 721 /2018/இ1**

| | | | |
|---|---|---|---|
| 17.10.2018 | 244 | <u>பொருள் எண். 5</u><br><br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 22660/2018/பிடி4 நாள். 25.09.2018 –ம் தேதிய சுற்றறிக்கையில் கட்டிட அனுமதி இணையதளம் முறையில் நடைமுறைப்படுத்தும் வகையில் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ. 500/– வசூல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் கட்டிட அனுமதி வழங்க இந்நாள் வரை ரூ. 200/– மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே இனிவரும் காலங்களில் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ. 500/– வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 1650 / எப்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2018 | 245 | <u>பொருள் எண். 6</u><br><br>துவாக்குடி நகராட்சியில் பணியாற்றி வரும் அலுவலக உதவியாளர், ஈப்பு ஓட்டுநர் மற்றும் பொது சுகாதார பணியாளர்களுக்க 2018–19 ம் ஆண்டுக்கு சீருடைகள் வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல் கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 1634 / எச்1 / 2018** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2018 | 246 | <u>பொருள் எண். 7</u><br><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான நான்கு வாகனங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி ஊதியம் மூலம் ஓட்டுநர்கள் அமர்த்தி கொண்டு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6,40,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 284 / எச்1 / 2017** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>17.10.2018</td>
<td>247</td>
<td><u>பொருள் எண். 8</u><br><br>மாநில கணக்காயர் தணிக்கைத் துறையில் காலங்கடந்த வைப்புத்தொகைகளை நகராட்சி பொது நிதி கணக்கில் வரவு வைக்க தெரிவித்துள்ளதன்பேரில் 2010–11 முதல் 2014–2015 முடிய உள்ள வைப்புத்தொகையில் ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்கியது போக மீதமுள்ள ரூ. 49,42,479/– யினை காலங்கடந்த வைப்புத்தொகையாக (Deposit Lapsed) எடுத்துக் கொண்டு நகராட்சி பொதுநிதி கணக்கில் வரவு வைக்க மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : –<br>ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படாத வைப்புத் தொகைகளை பொது நிதியில் வைக்கவும், ஒப்பந்ததாரர்கள் வைப்புத்தொகை கேட்டு விண்ணப்பிக்கும் போது நகர்மன்றத்தின் அனுமதி பெற்று உடன் தொகை வழங்க தீர்மானிக்கப்பட்டது.<br>ந.க.எண். 870 / சி1 / 2018</td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2018</td>
<td>248</td>
<td><u>பொருள் எண். 9</u><br>துணை இயக்குநர், சுகாதார பணிகள், திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண். ஆ3/58/2018 நாள். 2018 – கடிதத்தில் டெங்கு நோய் தடுக்கும் பணிக்கு 15 பணியாளர்களை நியமித்துக் கொண்டு களப்பணி மேற்கொள்ளப்படவேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளபடியால் அதன்படி 15 தினக்கூலி பணியாளர்களை நியமித்துக் கொண்டு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண். 1190 / 2018/ எச்1</td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2018</td>
<td>249</td>
<td><u>பொருள் எண். 10</u><br><br>துவாக்குடி நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Out Sourcing முறையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உள்ளூர் தினக்கூலி விலைவிகிதத்தின்படி ஓராண்டிற்கு ( 1.11.2018 முதல் 31.10.2019 வரை) ஓட்டுநர்களை சப்ளை செய்ய கோரி 30.10.2018 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br><table><tr><td>வ</td><td>பெயர் விவரம்</td><td>ஒப்பந்தப்புள்ளி தொகை</td></tr></table></td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>.எண்</td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>திரு. எம். ஜீவானந்தம், ஒப்பந்ததாரர்</td><td>ரூ. 400/– (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>2.</td><td>திரு. ஆர். சிவக்குமார், ஒப்பந்ததாரர்</td><td>ரூ. 410/– (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு)</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற வரிசை எண். 1 ல் கண்டுள்ள திரு. எம். ஜீவானந்தம், ஒப்பந்ததாரர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 284 / எச்1 / 2017
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.10.2018</td>
<td>250</td>
<td>
<u>பொருள் எண். 11</u>
துவாக்குடி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வரும் திருமதி. மங்கயைர்கரசி க/பெ. கணேசன் என்பவர் பணியிட மாறுதலில் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கும், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வரும் திருமதி. ஆர். பங்கஜவள்ளி என்பவர் துவாக்குடி நகராட்சிக்கும் பரஸ்பர மாறுதல் வழங்க திருத்துறைப்பூண்டி நகராட்சி தனது மன்ற தீர்மான எண். 385 நாள். 07.09.2018 –ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதால் அதனை ஏற்று திருமதி. மங்கையர்கரசி, க/பெ. கணேசன் துப்புரவு பணியாளரை திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கும், திருமதி. ஆர். பங்கஜவள்ளி துப்புரவு பணியாளரை துவாக்குடி நகராட்சிக்கும் பரஸ்பர பணியிட மாறுதல் வழங்குதவற்கு உரிய பரிந்துரை அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு பரிந்துரைக்கலாம்.
ந.க.எண். 1287 / எச்1 / 2017
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 17.10.2018 | 251 | <u>பொருள் எண். 12</u><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சொத்துவரி சீராய்வு செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு ரூ. 39312/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க. எண். 1315 / 2018/ அ1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2018 | 252 | <u>பொருள் எண். 13</u><br>துவாக்குடி நகராட்சியில் 2014–15 –ம் ஆண்டில் அம்மா உணவகம் கட்டும் பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு. எம். பொன்னுசாமி மேற்கண்ட பணியில் பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத காப்புறுதி தொகையினை திருப்பி தருமாறு கொடுத்துள்ள மனுவின்படி இந்நகராட்சியின் காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட விவரப்படியான வைப்புத்தொகைகளை ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | அளவு புத்தகம் எண் / ஆண்டு / பக்கம் எண். | 5% காப்புறுதி தொகை |
|---|---|---|---|
| 1. | திருச்சி தஞ்சை மெயின்சாலையில் நகராட்சி அலுவலகம் அருகில் அம்மா உணவகத்திற்கு கட்டிடம் கட்டுதல் | 56/2014–15<br>பக்கம் எண். 29<br>பக்கம் எண். 45<br>பக்கம் எண். 67<br>மொத்தம் | <br>20400<br>20032<br><u>9068</u><br><u>49500</u> |
| 2 | திருச்சி தஞ்சை மெயின்சாலையில் நகராட்சி அலுவலகம் அருகில் அம்மா உணவகத்திற்கு மின் அமைப்பு, பால் சீலிங், கதவுகள் அமைத்தல் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ளுதல் | 63/2014–15<br>பக்கம் எண். 18<br>பக்கம் எண். 36<br>மொத்தம் | <br>31995<br><u>12718</u><br><u>44713</u> |
| | | பெரு மொத்தம் | 94213 |

**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1435 / இ1 / 2018**

| | | | |
|---|---|---|---|
| 17.10.2018 | 253 | **<u>பொருள் எண். 14</u>**<br><br>துவாக்குடி நகராட்சியின் 2018–19 ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவிற்கு டெங்கு கொசு மற்றும் கொசுப்புழுக்கள் கட்டுபடுத்தும் மருந்து பொருள்கள் விநியோகம் செய்து கொள்வதற்கு கீழ்கண்ட இரண்டு நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.<br><br>1. M/s. ஞானம் என்விரான்மென்ட் சர்வீசஸ், தஞ்சாவூர்.<br>2. M/s. கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், தண்டலம்.<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஞானம் என்விரான்மென்ட் சர்வீசஸ், தஞ்சாவூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஞானம் என்விரான்மென்ட் சர்வீசஸ், தஞ்சாவூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கவும், அதற்குரிய பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 937 / எச்1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 17.10.2018 | 254 | **<u>பொருள் எண். 15</u>**<br><br>துவாக்குடி நகராட்சி பகுதியில் உள்ள வீடுகளுக்கு டெங்கு கொசு மற்றும் கொசுப்புழுக்கள் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு ஸ்டிக்கர் பிரிண்ட் செய்து விநியோகம் செய்ய கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. M/s. சைன் டிஜிட்டல் பிளக்ஸ் – ரூ. 3.95/–<br>2. M/s. பென்குயின் ஜெராக்ஸ் – ரூ. 3.50/–<br>3. M/s. ஸ்ரீகுமரன் டிஜிட்டல் பிரிண்டிங் – ரூ. 3.80/–<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. பென்குயின் ஜெராக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** – குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. பென்குயின் ஜெராக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கவும், அதற்குரிய பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1262 / எச்1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>17.10.2018</td>
<td>255</td>
<td>
<u>பொருள் எண். 16</u><br>
துவாக்குடி நகராட்சியின் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 09.10.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th></tr>
<tr><td>1.</td><td>நகராட்சி அலுவலக கணினி பிரிவிற்கு தேவையான பிரிண்டர் டோனர் சப்ளை செய்தல்</td><td>2.00</td><td>M/s, Cosmic Point Computers, Thanjavur<br><br>M/s, S.K. Marketting Service, Thanjavur</td><td>1,97,496/–<br><br>2,03,140/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br>
ந.க.எண். 1332 /2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2018</td>
<td>256</td>
<td>
<u>பொருள் எண். 17</u><br>
துவாக்குடி நகராட்சியில் பொது நிதி 2018–19 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்ச த்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>துவாக்குடி நகராட்சி 15–வது வார்டு முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் பேவர் பிளாக் அமைத்தல்</td><td>7.80</td></tr>
<tr><td>2.</td><td>துவாக்குடி நகராட்சி 15–வது வார்டு முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு புதிய சமையலறையுடன் கூடிய உணவு அருந்தும் கூடம் கட்டுதல்</td><td>9.60</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 1169 /2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

_______________ **X** _______________